Judicial Form No.53
(Sec.Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure/
XXV Bharatiya Nagarik Suraksha Sanhita)
In the Court of the Judicial Magistrate No.I, Poonamallee
CC.No.330/2024

Calendar )(
Miscellaneous )( Case No. of 202
Preliminary Register )(
Sessions
Deposition of witness for PW.2 (LW2) Prosecution
Defence
Court

Name :ராஜீவ்குமார்
Name S/O :சி.என்.சுகுமாறன்
Village :
Taluk :
Calling :
Religion : இந்தியன்
Age :
எதிரி ஆஜர் :எதிரிகள் 6,8,11 ஆஜரில் உள்ளார்கள்.
solemnly aaffirmed in accordance with the provisions of the Oaths Act 1969
(Central Act 44 of 1969 on the day of 04.05.2026

1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

எதிரிகள் அனைவருக்கும் எங்களது நிறுவனத்தின் சார்பாக ஒரு பெயர் வழங்கப்பட்டது என்றால் சரிதான். எங்களது அமெரிக்க நிறுவனத்தின் மின்னஞ்சல் என்ன என்றால் www.medproinc.com ஆகும். எங்களது அமெரிக்க நிறுவனம் மற்றும் இந்தியா நிறுவனம் ஆகியவற்றிற்கு மெட்புரோ என்றுதான் மின்னஞ்சலில் பெயர் சூட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் வெளிநாட்டில் தொழில் செய்வதற்கு www.medproinc.com மின்னஞ்சலும் சப்கான்ட்ராக்ட்ராக இந்தியாவில் தொழில் செய்வதற்கு www.medpro-hcs.com பயன்படுத்துவோம் என்றால் அமெரிக்க நிறுவனத்தின் மின்னஞ்சல் www.medproinc.com ஆகும். இந்திய நிறுவனத்தின் மின்னஞ்சல் www.medpro-hcs.com ஆகும்.

அமெரிக்காவில் உள்ள எங்களிடம் வியாபாரம் செய்யும் மருத்துவர்களிடத்தில் வியாபாரத்திற்காக நாங்கள் பயன்படுத்துவது www.medproinc.com மின்னஞ்சல் என்றால் அமெரிக்க நிறுவனம் அமெரிக்காவில் உள்ள முகவரியைதான் பயன்படுத்துகிறது. அமெரிக்கா நிறுவனத்திடம்தான் வியாபாரம் தொடர்பான பரிவர்த்தனைகள் மற்றும் பணம் செலுத்துவது நடந்தது என்றால் கான்ட்ராக்ட் போடுவது அமெரிக்க நிறுவனம் அதற்குரிய செயல்முறைகள் அனைத்தும் இந்திய நிறுவனத்தில் நடைபெறுகிறது. பணம் செலுத்துவது அமெரிக்க நிறுவனத்திற்கு அனுப்பப்படுகிறது. அமெரிக்க நிறுவனத்தால் போடப்பட்ட கான்ட்ராக்ட்களை வழக்கிற்காக நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்ததாக நினைவில் உள்ளது.

அதுபோன்ற அமெரிக்க நிறுவனத்திற்கும் மருத்துவர்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் மேற்படி ஒப்பந்தங்களை இந்தியாவில்தான் செயல்முறைகள் நடைபெறும் என்று குறிப்பிட்டுள்ளோமா என்றால் ஒப்பந்தங்களில் இங்கு நடைபெறும் செயல்முறைகள் குறித்து குறிப்பிடவில்லை. எதிரிகளும் அவரது நிறுவனத்தை அமெரிக்காவில் உருவாக்கியுள்ளார் என்றால் சரிதான். அமெரிக்காவில் உள்ள எதிரியின் நிறுவனம் நான் சொல்வதுபோல் எங்களுடைய டேட்டாக்களை திருடியுள்ளார்கள் என்றால் அமெரிக்காவில் உள்ள எதிரி நிறுவனத்துக்கு லாபம் வரும் என்றால் இதில் எதிரியின் அமெரிக்கா நிறுவனத்துக்கு லாபமா அல்லது எதிரியின் இந்தியாவில் உள்ள நிறுவனத்துக்கு லாபமா என்று எனக்கு தெரியாது. ஆனால் எதிரிகள் எங்களுடைய நிறுவனத்தின் தரவுகளை திருடி இந்திய நிறுவனத்தை துவங்கியுள்ளனர். அதன்பின்னர் அமெரிக்க நிறுவனத்தையும் துவங்கியுள்ளனர்.

அவ்வாறு திருடப்பட்ட டேட்டாக்களால் எங்களது அமெரிக்க நிறுவனத்துக்குதான் நஷ்டம் ஏற்படும் என்றால் இருநிறுவனங்களுக்கும்தான் நஷ்டம் ஏற்படும். முதலில் எந்த நிறுவனத்துகக்கு ஏற்படும் என்றால் எங்கள் இருநிறுவனங்களுக்கும்தான் நஷ்டம் ஏற்படும். நாங்கள் முதலில் எந்த நிறுவனத்திலிருந்து பில் அனுப்புகிறோம் என்றால் அமெரிக்க நிறுவனத்திலிருந்து அனுப்புகிறோம். இந்தியாவில் உள்ள நிறுவனத்தில் யாரிடமிருந்து எங்களுக்கு பணம் தரவேண்டும் வேலை முடிந்துவிட்டது என்று அனுப்புகிறோம் என்றால் அமெரிக்க நிறுவனத்தின் டிரைக்டர் உமாமகேஷ்வரன் அவர்களுக்கு பில் அனுப்புவோம். எங்களுக்கு வாடிக்கையாளரிடம் நேரடியாக பணப்பரிவர்த்தனைகள் தொடர்பு ஏதும் இல்லை என்றால் சரியல்ல. தொடர்பு உள்ளது.

அமெரிக்காவில் உள்ள வாடிக்கையாளர் எங்களது இந்திய நிறுவனத்துக்கு நேரடியாக பணம் செலுத்துகிறார்களா என்றால் இல்லை. அமெரிக்காவில் உள்ள அமெரிக்க நிறுவனத்தின் வாடிக்கையாளர் டேட்டாக்களை எதிரிகள் எங்களது இந்திய நிறுவனத்தில் திருடியதாக நாங்கள் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நாங்கள் திருடியதாக புகார் அளித்துள்ளது அமெரிக்க நிறுவனத்தின் டேட்டாக்களை மட்டுமல்ல, எங்ளது இந்திய நிறுவனத்துக்கு தயார் செய்து வைத்துள்ள standard operating procedure, SSN, agreement ஆகும். மேற்படி standard operating procedure, எதனை செயல்படுத்துவதற்காக நாங்கள் அமைத்திருந்தோம் என்றால் பில்லிங் பிராசஸ் எவ்வாறு செய்ய வேண்டும் என்பதற்கான வழிமுறைகள் அதில் உள்ளது அதைப்படித்தாலே எளிதாக புரியும் வகையில் உள்ளது. மேற்படி standard operating procedure எங்களுக்கு மட்டுமே உரியது என்பதற்காக காபிரைட், பேட்டண்ட் பெற்று வைத்திருந்தோமா என்றால் இல்லை. ஆனால் அதை எங்களுடைய நிறுவனத்தில் வேலை செய்பவர்கள் எங்கும் உபயோகப்படுத்தக்கூடாது என்று என்டிஏவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

SSN என்று நான் குறிப்பிட்டுள்ளதற்கு முழு விரிவாக்கம் என்ன என்றால் Social security number ஆகும். அமெரிக்காவில் உள்ள ஒரு நபருக்கு கொடுக்கப்படும் எண் என்றால் சரிதான். இந்த தரவுகள் அமெரிக்காவில் உள்ள நபர்களின் தரவுகளை எதிரிகள் திருடியதாக நான் சொல்கிறேன் என்றால் சரிதான். திருடப்பட்டதாக நான் சொல்லப்படும் ஒப்பந்தம் எதுபோன்றது என்றால் ஒரு பில்லிங் கம்பெனி டாக்டர் கிளைண்டுன் போடப்படும் ஒப்பந்ததின் நகல் ஆகும். அந்த ஒப்பந்தமானது அமெரிக்க நிறுவனம் டாக்டர்களிடத்தில் போட்டுக்கொள்ளும் ஒப்பந்தம் என்றால் சரிதான்.

அதுவும் அமெரிக்க பரிவர்த்தனைக்குண்டான அக்ரிமெண்ட் என்றால் சரிதான். இந்திய நிறுவனம் அமெரிக்க நிறுவனம் பெறப்பட்டுள்ள வேலைகளை செய்து தருகிறது. Non disclosure agreement ல் எதெல்லாம் செய்யக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் எங்கள் இந்திய நிறுவனத்துக்கு சொந்தமான எங்கள் நிறுவனத்தின் கஷ்டடியில் உள்ள எந்த ஒரு தரவுகளையும் எங்கள் நிறுவனத்தை விட்டு சென்றபிறகு உபயோகிக்கவோ அல்லது வேறு ஒருவருடன் பகிரவோ கூடாது போன்ற விஷயங்கள் அதில் உள்ளது. மேற்படி ஒப்பந்தமானது இந்தியாவில் செயல்படும் எங்கள் நிறுவனத்துக்கும் இந்தியாவில் பணியாற்றும் எங்கள் ஊழியர்களுக்கும் இடையில் போடப்பட்டது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தில் வேலையைவிட்டு நீக்கம் செய்பவர்களுக்கு மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது, வேலையைவிட்டு விலகிக்கொள்பவர்களுக்கு

பொருந்தாது என்றால் அதில் வேலையைவிட்டு நிற்பவருக்கும் பணிநீக்கம் செய்பவருக்கும் பொருந்தும். வேலையைவிட்டு செல்பவருக்கு மேற்படி ஒப்பந்தம் பொருந்தும் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. மேற்படி ஒப்பந்தத்தில் பரிகாரம் உருத்துக்கட்டளை மற்றும் அபராதம் மட்டுமே உள்ளது, குற்றவியல் வழக்கு தொடரலாம் என்று இல்லை என்றால் எனக்கு நினைவில் இல்லை. நான் பார்க்கவேண்டும்.

என்னிடம் காட்டப்படும் Non disclosure agreement ல் பரிகாரம் என்ற இடத்தில் குற்றவியல் வழக்கு தொடரலாம் என்று இல்லை என்றால் இந்தியாவில் சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்று உள்ளது, குற்றவியல் வழக்கு தொடரலாம் என்று இல்லை. வரம்பில் அனைத்து வழக்குகளும் சென்னையில் நடைபெறவேண்டும் என்று ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இழப்பீடு கோரி உயர்நீதிமன்றத்தில் எதிரிகள் மீது உரிமையியல் வழக்கு தொடர்ந்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தின்படி இந்திய சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்று உள்ளபோது வெளிநாட்டில் நடந்த பரிவர்த்தனைகள் தொடர்பாக இந்திய நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்ய முடியாது என்றால் இவ்வழக்கு திருட்டு என்பது இந்தியாவில் நடைபெற்றது. இந்தியாவில் டேட்டாக்களை காப்பாற்றும் வகையில் சட்டங்கள் இல்லை என்றால் அதைக்குறித்து எனக்கு தெரியாது. நீதிமன்ற வழக்கானது டேட்டாவை திருடியதற்காக போடப்படவில்லை, மோசடி செய்ததற்காக போடப்பட்டுள்ளது என்றால் திருட்டு ஏற்பட்டு மோசடி நடந்தது.

புகாரை 3 பேர் சேர்ந்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் டேட்டா திருட்டு சம்மந்தமாக புகார் அளித்ததற்கு ஃபோர்ஜெரி வழக்கு நடக்கிறது என்றால் டேட்டாவை திருடி ஃபோர்ஜெரி செய்துள்ளனர். எதிரிகள் நிறுவனத்தை ஆரம்பித்து பலமாதங்கள் கழித்துதான் நாங்கள் புகார் அளித்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் அமெரிக்காவில் உள்ள எதிரி நிறுவனத்தின்மீது வழக்கு தொடர முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிகள்தான் எங்கள்மீது அமெரிக்காவில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். நாங்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு எவ்வளவு தொகை இழப்பீடு கேட்டு யார்மீது போடப்பட்டுள்ளது என்றால் சுமார் ரூ.1,60,00,000/– தோரயமாக எதிரி நிறுவனத்தின் மீதும் உமர் மீதும் போடப்பட்டுள்ளது. எங்களது புகாரில் மேற்படி தொகை நஷ்டமானது என்பது குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் புகார் அளித்தபோது எங்களது நஷ்டத்தை கணக்கீடு செய்யவில்லை. எங்கள் நிறுவனத்தில் மினிட்ஸ் பதிவு செய்து புகார் அளிக்கவேண்டும் என்பதற்கு அனுமதி பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் எங்கள்

நிறுவனத்தில் நாங்கள் 3 பேரும் டிரைக்டர்ஸ் என்ற முறையில் வழக்கு பதிவு செய்துள்ளோம், இதற்கு மினிட்ஸ் தேவையில்லை. எதிரியின் நிறுவனம் நன்றாக செயல்படுகிறது என்ற பொறாமையின் காரணமாக காலதாமதமாக வெளிநாட்டில் நடந்த பரிவர்த்தனைகள் தொடர்பாக ஆளுகை வரம்பின்றி இந்த வழக்கை பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்கள் பலவருட உழைப்பை திருடி எங்கள் தரவுகளை திருடி ஃபோர்ஜெரி செய்து நிறுவனத்தை உருவாக்கியுள்ளார்கள். நிறுவனத்தை உருவாக்குவதற்கு என்ன ஃபோர்ஜெரி செய்தார்கள் என்றால் என்டிஏ ஒப்பந்தத்தை கடைபிடிக்கவில்லை, தரவுகளை திருடினார்கள், எங்கள் நிறுவனத்தில் வேலை செய்வதவர்களை அவர்கள் நிறுவனத்திற்கு அழைத்துள்ளார்கள். நான் பொய்யான புகாரை கொடுத்து எதிரிகளின் வளர்ச்சியை தடுப்பதற்காக பொய்யான வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல.

<u>7ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.</u>

கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. தகுந்த வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் வினோத்குமார் எதிர் ஸ்டேட் ஆப் பஞ்சாப் வழக்குப்படி குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Sdx/-Tmt.M.Amudha
Judicial Magistrate No.I
Poonamallee